அறிக்கையிடப்படக்கூடியது

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 697-98/2012

ஷாஜகான் ... **மேல்முறையீட்டாளர்**

எதிர்

மாநில அரசு சார்பாக

காவல்துறை ஆய்வாளர் ... **எதிர்மேல்முறையீட்டாளர்**

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண் 481/2015

பஷீர் மற்றும் மற்றொருவர் ... **மேல்முறையீட்டாளர்கள்**

எதிர்

மாநில அரசு சார்பாக

காவல்துறை ஆய்வாளர் ... **எதிர்மேல்முறையீட்டாளர்**

தீர்ப்புரை

நீதியரசர் திருமதி ஆர். பானுமதி:

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 69, 1096 மற்றும் 1097/2006-இல் மாநில அரசால் முன்கொணரப்பட்ட முறையீட்டை அனுமதித்து, அதில், இ.த.ச., பிரிவு 396-இன் கீழான குற்றத்தின் தண்டனையான 10 வருடகால சிறைத்தண்டனையிலிருந்து, ஆயுட்கால தண்டனையாக உயர்த்தி, மெட்ராஸ் உயர்

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பொது தீர்ப்புரையிலிருந்து இந்த மேல்முறையீடுகள் எழுகின்றன.

2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கமாவது, 13/14.11.2002-இன் இடைப்பட்ட இரவான 1.30 மணியளவில், குற்றஞ்சாட்டப்பட்ட மேல்முறை யீட்டாளர்களான பஷீர் (எ.1), ஷாஜகான் (எ.2), பாபு என்கிற நவாப் சாஉறிப் (எ.4) ஆகியோருடன் மற்ற இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களான, இராஜா முகமது (எ .3) மற்றும் பாலு என்கிற பாலசுப்ரமணியன் (எ.5) சேர்ந்துகொண்டு, அ.சா.1-முத்தையா என்பவருக்கு உரிமையான பெரி என்ற பெயர்கொண்ட நகை அடகுக் கடையில் கொள்ளையடிக்க பொது உட்கருத்து கொண்டனர். கொள்ளையடிக்கும்போது, கடையினுள் உறங்கிக் கொண்டிருந்த, இறந்துபோன முத்துக்கிருஷ்ணனின் கால்களை ஷாஜகான் (எ.2) இறுகப்பிடித்துக் கொண்டிருந்ததாக சாட்டுரைக்கப்படுகிறது மற்றும் பாபு என்கிற நவாப் சாகிப் (எ.4) முத்துக்கிருஷ்ணனின் மார்பின்மேல் அமர்ந்துகொண்டு, அவரின் கழுத்தை நெரித்து, அவருடைய கழுத்தைச் சுற்றி சணல் கயிறு கொண்டு இறுக்கி சாகும்வரை நெருக்கினார் என்று சாட்டுரைக்கப்படுகிறது. மற்றொரு குற்றஞ்சாட்டப்பட்டவர் மொத்தம் ரூ.12,00,000/- மதிப்புடைய 5.595 கி.கி. வெள்ளி நகைகளையும், சுமார் 4.788 கி.கி. தங்க நகைகளையும் கொள்ளையடித்தார். 13.11.2002 அன்று காலை சுமார் 5.30 மணியளவில், அடகு கடையின் துப்புரவாளராக வேலைசெய்து வருபவரான அ.சா.4-செல்லம், அ.சா.1-இன் வீட்டிற்குச் சென்று முத்துக்கிருஷ்ணன் கடையில் இறந்துகிடந்த தகவலைத் தெரிவித்தார். அ.சா.1, மந்தாரக்குப்பம் காவல் நிலையத்தில்

குற்றமுறையீடொன்றை தாக்கல் செய்தார். அதன் அடிப்படையில் காவல்துறை இ.த.ச., பிரிவுகள் 457,380 மற்றும் 302-இன் கீழ் குற்ற எண் 257/2002-இன் வழக்கொன்றை பதிவு செய்தது. அ.சா.37-காவல் நிலைய அதிகாரி புலன்விசாரணையை மேற்கொண்டார். 06.02.2003 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் இராஜா முகமது (எ.3) பண்ரூட்டி பேருந்து நிலையம் அருகில் கைதுசெய்யப்பட்டு, அ.சா.15-வாசன் முன்னிலையில் அவரது ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, அதனடிப்படையில் இராஜா முகமது (எ.3) -யிடமிருந்து தொகை ரூ.46,000/- கைப்பற்றப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட இராஜா முகமதுவின் ஒப்புதல் வாக்குமூலமானது, அவரின் முன்னிலையில், குற்றம் சாட்டப்பட்ட இராஜா முகமதுவால் அடையாளம் காட்டப்பட்டவரான நூருதீனிடமிருந்து முப்பது ஜோடி வெள்ளி கொலுசுகள், தங்க ஆரம் மற்றும் சங்கிலி ஆகியவற்றை அ.சா.ஆ.21-இன் கீழ் கைப்பற்றுவதற்கு வழிவகுத்தது. மேலும், வெள்ளி கொலுசுகள், தங்க மோதிரங்கள், ஆரம் என மொத்தம் பன்னிரண்டு வகையான நகைகள் அ.சா.ஆ.23-இன் கீழ் கள்ளக்குறிச் சியிலுள்ள கே.வி.எம். நகைக்கடையிலிருந்து கைப்பற்றுவதற்கு இராஜா முகமதுவின் ஒப்புதல் வாக்குமூலம் வழிகோலியது. மேலும், பதினேழு ஜோடி வெள்ளி கொலுசுகள், இருபது ஜோடி வெள்ளி பட்டடை கொலுசுகள் மற்றும் ஒரு தங்க சங்கிலி ஆகியவற்றை விருத்தாச்சலம், புதுப்பேட்டையிலுள்ள அவரது வீட்டிலிருந்து கைப்பற்றுவதற்கும் குற்றஞ்சாட்டப் பட்டவரான இராஜா முகமதுவின் ஒப்புதல் வாக்குமூலம் வழிகோலியது.

3. குற்றஞ்சாட்டப்பட்டவரான இராஜா முகமது காவல்துறையினரையும், அ.சா .15-ஐயும் அலிச்சகுடி கிராமத்திற்கு அழைத்துச்சென்று, அவரால் அடையாளம் காட்டப்பட்டதன்பேரில், பாபு என்கிற நவாப் சாகிப் (எ .4) கைது செய்யப்பட்டார்.குற்றஞ்சாட்டப்பட்ட பாபு என்கிற நவாப் சாகிப்பின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், அவருடைய தாயின் சகோதரி வீட்டிலிருந்து பதினேழு வகையான நகைகள் அ.சா.ஆ .28-இன் கீழ் கைப்பற்றப்பட்டன.பாபு என்கிற நவாப் சாகிப் (எ .4) -இன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், காவல்துறையினர் மும்பைக்குச் சென்று, அங்கு அவரது மாமா வீட்டிலிருந்தும், மேலும் பஞ்சசீல் ஜுவல்லரி என்ற நகைக்கடையிலிருந்தும் பலவகையான நகைகளைக் கைப்பற்றினர்.

4. மேல்முறையீட்டாளர்களான பஷீர் (எ.1) மற்றும் ஷாஜகான் (எ.2) 06.02.2003 அன்று பின்னிரவு நேரமான 1.30 மணியளவில் டி.வி.எஸ். 50 மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, காவல் துறையினரால் இடைமறிக்கப்பட்டதன்பேரில் மேல் முறையீட்டாளர்கள் ஓடத் துவங்கினர். காவல் துறையினர் அவர்களைப் பிடித்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட பஷீர் மற்றும் ஷாஜகானின் ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில், மேற்படி டி.வி.எஸ்.50 வண்டியின் பெட்ரோல் டேங்கின் உறையில் வைக்கப்பட்டிருந்த நகைகள், காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டன. தகவலளிப்பவர்களிடமிருந்து பெற்ற தகவலின் அடிப்படையில், அ.சா.37, 08.02.2003 அன்று அதிகாலை சுமார் 4.00 மணியளவில் மேயபாளையூர் கிராமத்தில் பாலு என்கிற பாலசுப்ரமணியன் (எ.5)-ஐ அவரது வீட்டின் முன்பு கைதுசெய்தார்.

அவரது ஒப்புதல் வாக்குமூலம், சிதம்பரத்திலுள்ள ஒரு நகைக்கடையிலிருந்து தங்க நகைகளைக் கைப்பற்றுவதற்கு வழிகோலியது. மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவரான பாலு என்கிற பாலசுப்ரமணியனின் ஒப்புதல் வாக்குமூலமானது, அவரது வீட்டிலிருந்தும் (அ.சா.ஆ.33) தங்க நகைகளைக் கைப்பற்றுவதற்கு வழிகோலியது. புலன்விசாரணையை முடித்ததன்பேரில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக, இ.த.ச., பிரிவுகள் 457, 395, 396 மற்றும் 302 உடனிணைந்த 34-இன் கீழ் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

5. விசாரணை நீதிமன்றத்தில், அரசுத்தரப்பு, நகை அடகுக் கடை உரிமையாளரான அ.சா.1, அ.சா.1-இன் கீழ் பணிபுரியும் அ.சா.2 மற்றும் அ.சா.3, மேலும், இதர சாட்சிகள் உட்பட முப்பத்தேழு சாட்சிகளை விசாரித்துள்ளது.சாட்சியத்தை பரிசீலித்ததன்பேரில், இ.த.ச., பிரிவு 396 உடனிணைந்த இ.த.ச., பிரிவு 34-இன் கீழ் விசாரணை நீதிமன்றம் மற்றவற்றிற்கிடையில் அனைத்து ஐந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு குற்றத்தின் தீர்ப்பளித்து, பத்து வருட கடுஞ்சிறைத் தண்டனை அனுபவிக்க அவர்களைத் தண்டித்தது.இ.த.ச., பிரிவு 396-இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்திற்கான தீர்ப்பைக் கருத்திற்கொண்டு, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்திற்கான தீர்ப்பு அவசிய மல்ல என்று விசாரணை நீதிமன்றம் தீர்மானித்தது.

6. குற்றத்திற்கான தீர்ப்பால் மனக்குறையுற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களான ஷாஜகானும், இராஜா முகமதுவும் உயர் நீதிமன்றம் முன்பாக மேல்முறையீடுகள் தாக்கல் செய்தனர்.

அவை தள்ளுபடியானது. இ.த.ச., பிரிவு 396-இன் கீழான குற்றத்தின் தீர்ப்புக்காக, மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டில், உயர் நீதிமன்றம் பத்தாண்டுகள் சிறைத் தண்டனையை, ஆயுள் சிறைத்தண்டனையாக உயர்த்தியது.உயர் நீதிமன்றம், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்திற்கான தீர்ப்பு என்ற வினாவிற்குள் செல்லவில்லை.

7. இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களைக் கேட்டு, பதிவாவணத்திலுள்ள சான்றாதாரங்களைப் பார்வையிட்டோம்.

8. அ.சா.15 மற்றும் அ.சா.17-இன் சான்றுரைகளிலிருந்தும், கைப்பற்றப்பட்ட நகைகளிலிருந்தும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களான இராஜா முகமது மற்றும் பாபு என்கிற நவாப் சாகிப் கூட்டுக் கொள்ளையடித்தலில் ஈடுபட்டனர் என்பதற்கு தெளிவான மற்றும் உறுதியான ஆதாரங்கள் அவர்களுக்கெதிராக உள்ளன.குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து அவ்வாறு கைப்பற்றப்பட்ட நகைகள் அடகுக் கடை உரிமையாளர் (அ.சா.1) -ஆலும், அ.சா.1-இடம் அடகு வைத்தவர்களான அ.சா.7 முதல் 14 வரையிலானவர்களாலும் அடையாளம் காட்டப்பட்டன. அ.சா.1-இன் சாட்சியமானது, அவ்வகையான நகைகள் அவரது அடகுக் கடையில் அடகு வைக்கப்பட்டிருந்தன என்பதைக்காட்டும் அவருடைய அடகுக் கடையில் பராமரிக்கப்பட்டு வந்த பதிவேடுகள் மூலம் உறுதியூட்டப்படுகிறது. இ.த.ச., பிரிவு 396-இன் கீழ் மேல்முறையீட்டாளர்களான இராஜா முகமது மற்றும் பாபு என்கிற நவாப் சாகிப்பின் குற்றத்திற்கான தீர்ப்பு மறுத்துரைக்கத்தகாதது.

9. ஒரு சார்புடைய பிறழ் சாட்சியாக மாறிய அ.சா.21-அன்பழகன் மற்றும் அ.சா.22-விஜயரங்கன் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட பஷீர் மற்றும் ஷாஜகான் கைது செய்யப்பட்டனர். அ.சா.21 தனது சாட்சியத்தில், டி.வி.எஸ் .50-இல் வந்துகொண்டிருந்த இரு நபர்களை காவல்துறையினர் இடைமறித்ததன்பேரில், அவர்கள் ஓட ஆரம்பித்தனர், அந்த நபர்கள் காவல்துறையினரால் துரத்தப்பட்டு பிடிக்கப்பட்டனர்; மேற்படி வண்டியின் பெட்ரோல் டேங்க் உறையில் இருந்த நகைகளை காவல்துறையினர் கைப்பற்றினர் என்று கூறினார். அ.சா.21 மற்றும் 22 அந்த இரு நபர்களைப் பற்றியும், மேற்படி இரு சக்கர வண்டியிலிருந்து கைப்பற்றப்பட்ட நகைகளைப் பற்றியும் கூறியுள்ளபோதிலும், அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களான பஷீர் மற்றும் ஷாஜகானை அடையாளங்காணவில்லை. விசாரணை நீதிமன்றத்தால் கருத்தறிவிக்கப்பட்டதுபோன்று, அரசுத்தரப்பின் வழக்கானது, குற்றஞ்சாட்டப்பட்டவர்களை அடையாளம் காணுதலைப் பொறுத்தவரையில், அ.சா.21 மற்றும் 22 பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர் என்பதால் மட்டும் நம்பத்தகாததல்ல என்பதாகும். விசாரணை நீதிமன்றத்தால் சுட்டிக்காட்டப்பட்டவாறு, அ.சா.21 மற்றும் 22-இன் சான்றினை, இரு சக்கர வாகனமான டி.வி.எஸ்.50-இல் சென்றுகொண்டிருந்த பஷீர் மற்றும் ஷாஜகான் குறித்தும், மேலும், கைது செய்தது மற்றும் நகைகளை கைப்பற்றியுள்ளது குறித்தும் தெளிவாக கூறியுள்ளவரான புலன் விசாரணை அதிகாரி (அ.சா.37) -இன் சான்றுடன் சேர்த்து படிக்கப்படவேண்டும். பஷீர் மற்றும் ஷாஜகானிடமிருந்து கைப்பற்றப்பட்ட நகைகள், அடகுக்கடை உரிமையாளரான அ.சா.1-ஆல் மேலும் அடையாளம் காட்டப்பட்டன. அ.சா.21 மற்றும்

22 பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர் என்ற பொருண்மை, பஷீர் மற்றும் ஷாஜகான் கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டு குற்றம் புரிந்துள்ளது தொடர்பான அரசுத்தரப்பு வழக்கை பாதிக்காது. இ.த.ச., பிரிவு 396 கூட்டுக் கொள்ளையுடன் கொலைபுரிந்ததற்கான தண்டனையை வகுத்துரைக்கிறது. கூட்டுக் கொள்ளை நிகழ்வின்போது, ஒரு கொள்ளையன் கொலைபுரிந்தால், கூட்டுக் கொள்ளையில் அவருடன் இணைந்த கூட்டாளிகளனைவரும் கூட்டுக் கொள்ளையில் அவர்கள் பங்கேற்றனர் என்ற பொருண்மைக்கப்பால், கொலையில் அவர்கள் பங்கேற்காமலிருந்தாலும், இ.த.ச., பிரிவு 396-இன் கீழ் தண்டிக்கப்படத்தக்கவர்களாவர். "மரணம் அல்லது ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் விடயத்தில், நீதிமன்றத்தின் கடப்பாடானது, இ.த.ச., பிரிவு கள் 302 மற்றும் 396 என்ற இரண்டிற்குமான ஒரே தொடர்பினைக் கொண்டுள்ளது. இ.த.ச., பிரிவு 396-இன் கீழான குற்றமானது, இ.த.ச. பிரிவு 396-இன் கீழான தண்டனைத் தீர்ப்புக்காக கடுமையானதாக பார்க்கப்பட வேண்டியுள்ளதென்றாலும், இ.த.ச., பிரிவு 396-இன் கீழான தண்டனைத் தீர்ப்புக்காக மரணம் அல்லது ஆயுள் சிறைத்தண்டனையைவிட குறைவான தண்டனையை விதிக்கும் சாத்தியத்தைப் பொறுத்தவரையில் நீதிமன்றத்திடம் பெரிதளவிலான விருப்பதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

10. தினேஷ் என்கிற புத்தா -எதிர்-இராஜஸ்தான் மாநில அரசு, (2006) 3 எஸ்.சி.சி. 771-இன் மீது சார்வுற்று, உயர் நீதிமன்றம் கூட்டுக் கொள்ளை நிகழ்வின்போது கொலைபுரிதலை கடுமையானதாக பார்க்கப்படவேண்டும் என்ற கருத்தை எடுத்தது.

மேலும், இ.த. ச., பிரிவு 396-இன் கீழான குற்றத்தை, குறிப்பாக, கூட்டுக் கொள்ளையர்கள் ஆயுதம் வைத்திருக்கும் போது கடுமையாக பார்க்கப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால், கையிலுள்ள வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆயுதங்கள் வைத்திருக்கவில்லை. குற்றஞ்சாட்டப்பட்ட பாபு என்கிற நவாப் சாகிப், இறந்த முத்துக்கிருஷ்ணன்மேல் அமர்ந்து அவரது மூக்கையும், வாயையும் அழுத்திய தாக சாட்டுரைக்கப்பட்டுள்ளது மற்றும் அவரது கழுத்தை கயிற்றால் இறுக்கியதாகவும் சாட்டுரைக்கப்பட்டுள்ளது. சம்பவம் 2002-ஆம் ஆண்டு நடந்தது. வழக்கின் பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் மற்றும் நீண்டகாலம் கடந்துவிட்டதையும் பரிசீலித்து, விசாரணை நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டவாறு, ஆயுள் சிறைத் தண்டனையானது பத்தாண்டுகளாக மாற்றியமைக்கப்படுகிறது.

11. இ.த.ச., பிரிவு 396-இன் கீழான தண்டனைத் தீர்ப்பை நிலைநிறுத்துகையில், மேல்முறையீட்டாளர்களான பஷீர், ஷாஜகான் மற்றும் பாபு என்கிற நவாப் சாகிப்பின் மீது விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை, பத்து வருட கால சிறைத்தண்டனையாக மாற்றியமைக்கப்படுகிறது. அதனைத் தொடர்ந்து மேல்முறையீடுகள் பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன.

மேல்முறையீட்டாளர்கள் பத்தாண்டுகளுக்கும் மேலாக காவலில் இருந்துவருவதாக சொல்லப்படுவதால் மேல்முறையீட்டாளர்கள் வேறெந்த வழக்கிற்கும் தேவைப்படாவிடில் உடனடியாக விடுவிக்கப்பட உத்தரவிடப்படுகின்றனர்.

நீதியரசர் திரு. இரஞ்சன் கோகாய்

நீதியரசர் திருமதி ஆர். பானுமதி

புதுதில்லி
பிப்ரவரி 16, 2018

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."